முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1683

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.05.2024,** புதன்கிழமை

1. வள்ளலே வாழுகின்ற ஞானியே
வரம் தந்து கலியுக மக்களும்
வல்லமை கூட்டி உலகமெங்கும் சேவையாற்ற
வழிகாட்டும் ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(குரோதி வருடம் சித்திரை மாதம் 25 ம் நாள், 08.05.2024, புதன்கிழமை)
வரமாக அரங்கனோடு யானிருந்து
வருவோர்க்கு சக்தி வழங்கி வர
3. வருகவே அரங்கன் ஞானமே
வையகத்தை மாற்றுகின்ற உயர் ஞானமாகும்
தர்மபலம் மிக்க அரங்கன் அன்னதான சேவையே
தரணியை மாற்றுகின்ற மிகுந்த சேவை மார்க்கமாகும்
4. ஆகவே உலகோர் அரங்கன் கொள்கை
அன்னதான சேவை அனைத்தையும் ஏற்று ஆற்றலாக வர
வரமாக வையகத்தில் பெருமாற்றம்
வள்ளல் அரங்கன் தயவோடு நடந்தேறும்
5. தர்ம குணம் பெருகி தர்மலோகமாக உலகம் மாற்றம் கண்டு
பெருமை கொண்ட ஞானவான்கள்
புகலுவேன் அரங்கன் ஆன்மீக ஞான உயர் வழிகாட்டல் வழி
தர்மலோகத்தோடு தனிப்பெரும் ஞான உலகமாற்றம் செய்து
6. ஞானவான்கள் தலைமையும் ஞானிகள் ஆட்சியும்
நல்லோர்கள் ஒன்று கூடிட
ஞானசபையும் அரங்கன் தயவால் அரங்கேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–